**பத்தாம் வகுப்பு – தமிழ்**

**நேரம் – 1.30 மணி** **தேர்வு – 5 (இயல் 1-5)** **மதிப்பெண்கள் 50**

**பகுதி – I (மதிப்பெண்கள் 8)**

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 7×1=7

**ii) குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1. செய்தி 1 – ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 15ஐ உலகக்காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
   செய்தி 2 – காற்றாலை மின்உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாம் இடத்தில் உள்ளது எனக்குப் பெருமையே.
   செய்தி 3 – காற்றின் ஆற்றலைக் கொண்டு கடல் கடந்து வாணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்.
   அ) செய்தி 1 மட்டும்சரி ஆ) செய்தி 1,2 ஆகியனசரி
   இ) செய்தி 3 மட்டும்சரி ஈ) செய்தி 1,3 ஆகியனசரி
2. ”பாடுஇமிழ் பனிக்கடல் பருகி” என்னும் முல்லைப்பாட்டு உணர்த்தும் அறிவியல் செய்தி---
   அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சியடைதல்
   இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்
3. பரிபாடல் அடியில் ’விசும்பும் இசையும்’ என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
   அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
   இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்
4. “அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி, மருளை அகற்றி மதிக்கும் தெருளை” – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
   அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்
5. “இங்கு நகரப் பேருந்து நிற்குமா? என்று வழிப்போக்கர் கேட்பது ……. வினா.
   “அதோ, அங்கே நிற்கும்” என்று மற்றொருவர் கூறுவது …… விடை.
   அ) ஐயவினா, வினா எதிர்வினாதல் ஆ) அறிவினா, மறைவிட
   இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

”முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் –நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு”

6. முத்தமிழ் – பிரித்து எழுதுக.
   அ) மு+தமிழ் ஆ) மூ+ தமிழ் இ) மூன்று+தமிழ் ஈ) முத்+தமிழ்
7. மேவலால் – பொருள் தருக.
   அ) நீங்குவதால்,பெறுதலால் ஆ) ஒழிவதால், பெறுதலால்
   இ) பொருந்துவதால், பெறுதலால் ஈ) விளங்குவதால், பெறுதலால்

**பகுதி – II (மதிப்பெண்கள் 8)** **பிரிவு -1**

**எவையெனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 2×2=4

8. விடைக்கேற்ற வினாவினை அமைக்க.
   அ. நாம் இப்போது செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் இருக்கிறோம்.

ஆ. மொழிபெயர்ப்பு எல்லாக் காலக்கட்டத்திற்கும் தேவையான ஒன்று.

9. தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டு குத்தி எடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி என்பது இலக்கிய செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.

10. "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன்பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்"-இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

**பிரிவு -2**

**எவையெனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வெண்டும்.** 2×2=4

11. "சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக.

12. வினை அடியை விகுதியுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.

அ) காண் ஆ) சிரி

13. பகுபத உறுப்பிலக்கணம் தருக. மலைந்து

**பகுதி – III (மதிப்பெண்கள் 9)** **பிரிவு - 1**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1×3=3

14. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'. - இதுப்போல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க

15. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

**பிரிவு - 2**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1×3=3

16. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக

17. "விருந்தினனாக " எனத்தொடங்கும் காசிக்காண்டம் பாடலை எழுதுக.

**பிரிவு - 3**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1×3=3

18. "முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்." – இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

19. எடுத்துக்காட்டு உவமையணியைக் கூறுக.

**பகுதி – IV (மதிப்பெண்கள் (10)**

**அனைத்தது வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்க.** 2×5=10

20. அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

(அல்லது)

ஆ) மாநில அளவில் நடைபெற்ற' மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

21. அ) பின்வரும் ஆங்கில கவிதையை மொழிபெயர்க்க.

It gave Valluva the Great
For all the world to have;
And the fame rose sky high
Of our Tamil – Land
It made a necklace of gems,
Named 'The Lay of the Anklet'
Which grips enraptured hearts
In our Tamil – Land

\- The voice of Bharathi (அல்லது)

ஆ) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**பகுதி - V (மதிப்பெண்கள் 16)**

**அனைத்தது வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்க.** 2×8=16

22. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை எழுதுக. (அல்லது)

ஆ) தமிழ் இலக்கியவளம் - கல்வி மொழி- பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள்- அறிவியல் கருத்துகள் – பிறதுறைக் கருத்துகள் – தமிழக்குச் செழுமை – மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

23. அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை – தோற்றமும் வளர்ச்சியும் – இணையம் – கணினி வழிக்கல்வி – பயன்படும் துறைகள் – உலகம் உள்ளங்கையில் – முடிவுரை.

ஆ) 'அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்' என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.

www.Padasalai.Net